10th November 1965]

புலவர் கா. கோவிந்தன் : செய்யாறு, வந்தவாசி ஆகிய தாலுக்காக்களில் இருக்கிற மக்கள் திண்டிவனம் வந்துதான் ரயில் ஏற வேண்டிய நிலை இருக்கின்றன. இங்கே போட்மெயில், தூத்துக்குடி ரயில்கள் தான் நிற்கின்றன. திருநெல்வேலி, திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ்கள் நிற்பதில்லை. அவற்றையும் நிறுத்த வேண்டும் என்பதாக மத்திய அரசுக்குச் சிபார்சு செய்யப்படுமா ?

கனம் திரு. வெ. ராமையா : எல்லா ஸ்டேஷன்களிலும், எல்லா ரயில்களும் நிற்கவேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. சில வண்டிகள் வேகமாகச் செல்லவேண்டியிருப்பதால் அடிக்கடி பல ஸ்டேஷன்களில் நிற்க முடியாது.

* 436 கேள்வி—திரு. ஆ. தங்கவேலு : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து விழுப்புரம், திருச்சிராப்பள்ளி வழியாக திருநெல்வேலி செல்லும் ரெயில் பாதையை அகலப்பாதையாக (Broad gauge) மாற்ற வேண்டுமென்று கோரி மத்திய அரசுக்கு மாநில அரசு ஏதேனும் விண்ணப்பம் செய்ததா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

கனம் திரு. வெ. ராமையா : (அ) & (இ) மதுரை வழியாகத் திருச்சியிலிருந்து தூத்துக்குடிக்கும், திருநெல்வேலிக்கும் பிராட் கேஜ் ரயில்பாதை அமைக்கும் வேலையை உடனடியாக எடுத்துக் கொள்ளும்படியும், சென்னையிலிருந்து திருச்சிக்குச் செல்லும் மீட்டர் கேஜ் பாதையை பிராட் கேஜ் பாதையாக மாற்றி அமைக்கும் வேலைக்கு அதற்கடுத்தாற்போல் முக்கியத்துவம் அளிக்கும்படியும் இந்திய அரசாங்கத்திற்கு எழுதப்பட்டது. தற்போதுள்ள மீட்டர் கேஜ் பாதையை பிராட் கேஜ் பாதையாக மாற்றுவது பற்றி, வண்டிப் போக்குவரத்துத் திறனுக்கேற்ப அவ்வப்போது ஆலோசிக்கப்படும் என்று இந்திய அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது. திருச்சிராப்பள்ளி-தூத்துக்குடி மார்க்கம் சம்பந்தமாக இந்திய அரசாங்கம் முன்னோடித் திட்ட ஆய்வை மேற்கொண்டுள்ளது.

Irrigation Projects

* 437 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the details of Irrigation Projects that are under negotiations with the neighbouring State Governments; and

(*b*) the present stage of the negotiations?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) & (*b*) The question of utilisation of the West flowing rivers in Madras State was discussed between the Ministers of the Madras and Kerala States in July 1963, when it was agreed that the Engineers of the two States should examine the availability of supplies. The Chief Engineer (Irrigation) carried out his preliminary investigation and submitted his proposals. Copies of this report have been sent to the Government of Kerala.

The reply of the Government of Kerala in the matter is awaited